### ஊரக வளர்ச்சி – ஊராட்சித் துறை சார்பில் ரூ.104.24 கோடி செலவில் கட்டப்பட்ட கட்டடங்களை – முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

# 818 சாலை ஆய்வாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2025) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 818 சாலை ஆய்வாளர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பா. பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, ஆக. 23 -

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் ரூ.104.24 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களைத் திறந்து வைத்து, 818 சாலை ஆய்வாளர்கள் பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.8.2025) தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 104.24 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள். கொட்டாம்பட்டி புதிய பேருந்து நிலையம், 66 புதிய பள்ளிக் கட்டடங்கள், 4 புதிய நூலகக் கட்டடங்கள், 49 பொது விநியோகக் கடைகள், 26 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள், 25 உணவு தானிய சேமிப்பு கிடங்குகள், 45 ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், 16 கிராம செயலகக் கட்டடங்கள், 84 புதிய அங்கன்வாடி மையக் கட்டடங்கள், 3 சமூகநலக் கூடங்கள். மதுக்கூரில் நேரடி நெல் விற்பனை மையக் கட்டடம், 3 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டடங்கள், 2 மகளிர் சுய உதவிக் குழு கட்டடங்கள் மற்றும் 2 பாலங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 818 சாலை ஆய்வாளர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முக்கிய நோக்கமாகும். அதன்படி, ஊரகப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான சாலைகள், தெருவிளக்குகள், குடிநீர் வழங்கல், சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத்தி, உட்கட்டமைப்புகளான பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள், ஊரகச் சந்தைகள், உணவு கிடங்குகள் போன்றவற்றை ஏற்படுத்தி, புதிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கி அதனை திறம்பட தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் வசதிக்காகவும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் நல்ல காற்றோட்டமான அலுவலக சூழலில் பணியாற்ற ஏதுவாகவும், பழைய பழுதடைந்த கட்டடங்களுக்குப் பதிலாக புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்டும் திட்டம் 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலான அரசால் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தற்போதுவரை 348 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, அதில் 290 கட்டடங்கள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன.

இவ்வாறு கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களில் ஊராட்சி ஒன்றிய பணியாளர்களுக்கேற்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி சிறந்த பணிச்சூழலை ஏற்படுத்த, இந்த புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் தரை மற்றும் முதல் தளம், முகப்பு கட்டடம், ஊராட்சி ஒன்றிய கூட்ட அரங்கு, சுய உதவிக் குழுக்களுக்கான பிரத்யேக பயிற்சி அரங்கு, ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அறைகள், பொறியியல் பிரிவிற்கென தனி அறைகள், பொதுமக்களுக்கான விசாலமான பகுமுகக்கூடம், கணினி அறை, எழுதுபொருட்கள் பாதுகாப்பு அறை, கழிவறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, திருநெல்வேலி மாவட்டம் - நாங்குநேரி ஒன்றியத்தில் 3 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் - தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில்

3 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள்;

மதுரை மாவட்டம் - கொட்டாம்பட்டியில் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையம்;

ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களின் கல்வி மேம்பாட்டிற்காக 19 மாவட்டங்களில் 20 கோடியே 34 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 66 புதிய பள்ளிக் கட்டடங்கள்;

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் மற்றும் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்திட அரியலூர் மாவட்டம் - உட்கோட்டை, தருமபுரி மாவட்டம் - மாதேமங்கலம், வேலூர் மாவட்டம் - வளத்தூர், கடலூர் மாவட்டம் - அன்னவல்லி ஆகிய இடங்களில் 88 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 புதிய நூலகக் கட்டடங்கள்;

ஏழை மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக 11 மாவட்டங்களில் 5 கோடியே 28 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 49 பொது விநியோகக் கடைகள்;

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களின் சுகாதாரத்தினை மேம்படுத்தும் விதமாக 13 மாவட்டங்களில் 18 கோடியே 75 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 26 ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்;

ஊரகப் பகுதிகளில் விளையும் விளைபொருட்களை சேமித்து எளிமையாக சந்தைப்படுத்திட 11 மாவட்டங்களில் 3 கோடியே 5 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 25 உணவு தானிய சேமிப்புக் கிடங்குகள்;

ஊராட்சிமன்ற செயல்பாட்டினை மேம்படுத்திட 12 மாவட்டங்களில் 13 கோடியே 27 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 45

ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடங்கள்;

ஊராட்சிமன்றம் மற்றும் கிராம நிர்வாக அலுவலகம் இரண்டினையும் ஒருங்கிணைத்து ஓரிடத்தில் மக்கள் அரசு பயன்களை பெற்றிட

6 மாவட்டங்களில் 6 கோடியே 69 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 16 கிராம செயலகக் கட்டடங்கள்;

சிறுகுழந்தைகள் நலம் பேணிட 19 மாவட்டங்களில் 12 கோடியே 69 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 84 புதிய அங்கன்வாடி மையக் கட்டடங்கள்;

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்கள் தங்களின் குடும்ப நிகழ்வுகளை நடத்திட தேனி மாவட்டம் - அம்மச்சியாபுரம், கடலூர் மாவட்டம் - அன்னவல்லி, தூத்துக்குடி மாவட்டம் - கூட்டுடன்காடு ஆகிய இடங்களில் 1 கோடியே 19 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 3 சமூகநலக் கூடங்கள்;

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் ஒன்றியத்தில் 35 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நேரடி நெல் விற்பனை மையக் கட்டடம்;

பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் மூலம் பாலினை விற்பனை செய்திட விழுப்புரம் மாவட்டம் - கண்டம்பாக்கம் மற்றும் சகாதேவன்பேட்டை, திருச்சிரா ப்பள்ளி மாவட்டம் - சனமங்கலம் ஆகிய இடங்களில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கக் கட்டடங்கள்;

செங்கல்பட்டு மாவட்டம் - ஊரப்பாக்கம் மற்றும் சேலம் மாவட்டம் - டேனிஷ்பேட்டை ஆகிய இடங்களில் 1 கோடியே 66 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 மகளிர் சுய உதவிக் குழு கட்டடங்கள்;

ஊரகப் பகுதிகளில் சாலை வசதிகளை மேம்படுத்தும் விதமாக கிருஷ்ணகிரி மாவட்டம் - பெருகோபனப் பள்ளி மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் - அயக்கோடு ஆகிய இடங்களில் ஆறுகளின் குறுக்கே

6 கோடியே 95 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இரண்டு பாலங்கள்;

என மொத்தம் 104 கோடியே 24 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் திட்டக் கண்காணிப்பு பணிகளை திறம்பட மேற்கொள்ள, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 818 சாலை ஆய்வாளர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் பா. பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட தி.மு.க.

## பொறியாளர் அணி ஒன்றிய,நகர,பேரூர் பொறுப்புகளுக்கான நேர்காணல்!

### தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. தலைமையில் முனைவர் சி.பிரதீப் நடத்துகிறார் !

*கள்ளக்குறிச்சி ஆக.23-*

*கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக பொறியாளர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பொறுப்பிற்கான நேர்காணல் இன்று (23.08.2025 -சனிக்கிழமை ) மதியம் 2.00 மணியளவில், கள்ளக்குறிச்சி மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.*

*கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் தா. உதயசூரியன் தலைமை வகிக்கிறார்.*

*பொறியாளர் அணி மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.துரைமுருகன் வரவேற்புரையாற்றுகிறார்.*

*அணியின் மாவட்ட தலைவர் எம்.கே. கணேசன், துணைத் தலைவர் ஏ. பாண்டூர் பாஸ்கர், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே. ரமேஷ்,எஸ். பிரேம்,இ. விஜயகுமார், எஸ். சபரிநாதன்,செ. கிருஷ்ணகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர், திருவண்ணாமலை மண்டல மேற்பார்வையாளர் முனைவர்.சி.பிரதீப் நேர்காணல் நடத்த உள்ளார்.*

*அதுசமயம் பொறியாளர் அணி பொறுப்பு கோரும் கழகத் தோழர்கள் அனைவரும் நேர்காணலில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.*

*நேர்காணலில் கலந்து கொள்பவர்கள் கவனத்திற்கு...*

*1. கழகப் பணிகள் குறித்த ஆவணங்கள் எடுத்து வர வேண்டும்.*

*2. ஆதார் அட்டை அல்லது ஓட்டு ID*

*3. கல்விச் சான்றிதழ்கள் எடுத்து வர வேண்டும்.*



கழக பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் துணைவியாரும் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்தில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் நேரில் சென்று அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினார்.

## ‘தி.மு.க.75’ நூல் குழுவினருடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனை!





கழக இளைஞர் அணி தமிழ்நாடு முழுவதும் நிர்வாகிகள் நியமனம், அறிமுகக்கூட்டங்கள் போன்ற அரசியல் பணிகளை ஆற்றுவதுடன் சட்டமன்றத் தொகுதிதோறும் கலைஞர் நூலகங்கள் அமைப்பது, இளம் பேச்சாளர்களுக்குப் பயிற்சியளித்து கூட்டங்களில் பேச வைப்பது, முரசொலி பாசறைப்பக்கம், முத்தமிழறிஞர் பதிப்பகம், கலைஞர் மாணவப்பத்திரிகையாளர் திட்டம், இளம் ஆய்வாளர்களுக்கான கலைஞர் நிதி நல்கை திட்டம் போன்ற கருத்தியல் பணிகளையும் முன்னெடுத்து வருகிறது.

இளைஞர் அணியின் கருத்தியல் சார்ந்த பணிகளின் அடுத்தகட்ட முன்னெடுப்பாக, திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் அரசியல் - சமூகம் - பொருளாதாரம் - பண்பாட்டுத் தளங்களில் கழகம் ஏற்படுத்திய தாக்கம் குறித்த தி.மு.க. 75 கட்டுரைத் தொகுப்பு, நம் கழக இளைஞர் அணியின் ‘முத்தமிழறிஞர் பதிப்பகம்’ மூலம் வெளிவரவிருக்கிறது.

கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலோசனைக்குழுவில் திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, ‘கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சியின் செய்தி ஆசிரியர் ப.திருமாவேலன், மூத்த பத்திரிகையாளர் விஜயசங்கர் ராமச்சந்திரன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி லெனின் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

தமிழ்நாட்டின் முக்கியமான எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், சமூக, அரசியல் இயக்கத் தலைவர்களின் முக்கியமான கட்டுரைகளைத் தாங்கி வெளிவரவிருக்கும் இந்தக் கட்டுரைத் தொகுப்பு ஒரு முக்கியமான வரலாற்று ஆவணமாக அமையும்.

இந்தக் கட்டுரைத்தொகுப்பின் உள்ளடக்கம், வடிவமைப்பு பணிகள் குறித்து ஆலோசனைக்குழு மற்றும் ஆசிரியர் குழுவுடன் கழக இளைஞர் அணிச்செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 21.08.2025 அன்று சென்னை குறிஞ்சி இல்லத்தில் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.